செ.வெ.எண்: 29/2021 நாள்: 25.05.2021

## பத்திரிக்கை செய்தி

**ஊரகவளர்ச்சித்துறை கண்காணிப்பு அலுவலர் தலைமைப் பொறியாளர் திரு.அ.குற்றாலிங்கம் அவர்கள் ஆலங்குளம் மற்றும் கீழப்பாவூர் வட்டாரங்களில் உள்ள ஊரக பகுதிகளில் கொரோனாதடுப்பு பணிகளைஆய்வுசெய்தார்.**

ஊரக வளர்ச்சித்துறை மூலமாக ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊரக பகுதிகளில் வட்டாரவளர்ச்சிஅலுவலர்கள், மண்டல துணை வட்டாரவளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலாளர்கள், DBC Workers, தூய்மைகாவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஒருங்கிணைந்து கொரோனா தடுப்புகளப்பணிகள் செய்துவருகின்றனர். கொரோன நோய் தொற்றினை கட்டுப்படுத்த சென்னை, ஊரகவளர்ச்சித்துறை ஆணையர் அவர்களால் மாவட்ட அளவிலான கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து களப்பணிகளை பார்வையிட சென்னை, ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநரக தலைமைப் பொறியாளர் திரு.அ.குற்றாலிங்கம் அவர்கள் ஆலங்குளம் ஊராட்சிஒன்றியத்திற்குட்பட்ட மாறாந்தை ஊராட்சியில் ஆய்வு மேற்கொண்டார். மேலும், கொரோனா தடைசெய்யப்பட்ட பகுதியில் பணியில் ஈடுபட்டுள்ள தன்னார்வலர்கள் மற்றும் DBC Workers, தூய்மைகாவலர்களிடம் எவ்வாறு பணிபுரிகின்றனர் என்றவிபரம் கேட்டறிந்தார். தூய்மைபணியாளர்களுக்கு தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கினார். பின்பு, கொரோனா தடுப்புபணியாளர்களுக்கு வீடுவீடாக சென்று உடலை பரிசோதிக்கும் கருவி(Thermal Scanner&Pulse oximeter) மற்றும் உபகரணங்களைவழங்கினார். மேலும், மாறாந்தை ஊராட்சியில் மருத்துவமுகாம் நடைபெற்றதை பார்வையிட்டார்.

மேலும், ஆட்டோ மூலம் கொரோனா விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொண்டதை பார்வையிட்டார். அதன்பின் தன்னார்வர்கள் மூலம் Covid-19 Disaster Response Team வாகனம் மூலம் கொரோனா விழிப்புணர்வு மேற்கொள்வதை பார்வையிட்டார்.

நல்லூர் கிராமஊராட்சியில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதி, மற்றும் மருத்துவ முகாம்,மற்றும் கிருமிநாசினி தெளிக்கும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். தமிழக அரசு அறிவித்த கிராமஊராட்சியில் காய்கறிகள் விநியோக வாகனத்தை பார்வையிட்டார். பின்பு கபசுரக் குடிநீர் விநியோகம், சளிமாதிரி எடுக்கும் பணிகளைஆய்வுசெய்தார்.

ஆலங்குளம் ஊராட்சிஒன்றிய அலுவலகவளாகத்தில் உள்ளஅங்கன் வாடிமையத்தில் 18 வயது முதல் 44 வயது வரை உள்ளவர்களுக்கு கோவிசீல்டு தடுப்பூசி முகாமினை துவக்கிவைத்தல், தடுப்பூசி பணியினை ஆய்வு செய்தார். அதன் பின்பு, அத்தியூத்து சர்தார் ராஜா கல்லூரியில் அமைந்துள்ள கொரோனா நோயாளிகள் பாதுகாப்பு மையத்தினை ஆய்வுசெய்து அங்குள்ள குறைகளை கேட்டறிந்தார்.

கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் செயல்படும் வட்டார அளவிலான கொரோனா தடுப்பு கட்டுப்பாட்டு அறையினை ஆய்வு செய்தார். வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள

நோயாளிகளிடம் தினந்தோறும் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் படுத்தி உற்சாகப்படுத்தும் விதமாகஅறிவுரைகள் வழங்கஅறிவுறுத்தினார்.

அதன் பின்பு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் வைத்துகொரோனா நோய் தொற்று கட்டுப்படுத்துவது தொடர்பாக இணையதளம்(GoogleMeet) மூலமாக அனைத்து மண்டல அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு(வ.ஊ)/(கி.ஊ) கலந்தாய்வு செய்து அறிவுரைகள் வழங்கினார்.

ஆய்வின் போது, திரு.நா.சரவணன், திட்ட இயக்குநர், மாவட்டஊரகவளர்ச்சிமுகமை, தென்காசி, திரு.க.முருகன், செயற்பொறியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திரு.பாலசுப்பிரமணியன், மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர், திரு.அ.பிரான்சிஸ் மகாராஜன், உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), திரு.ஜி.சங்கரநாராயணன், உதவிதிட்டஅலுவலர், நிர்வாகம் மற்றும் கணக்குகள், (மகளிர் திட்டம்) மற்றும் வட்டாரவளர்ச்சிஅலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**